**பொள்ளாச்சி நகராட்சி**

**சாதாரணக் கூட்டம்**

**29.12.2023 தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம் நடவடிக்கைகள்**

| வ. எண் | பொருள் விபரம் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | பொள்ளாச்சி நகராட்சியில் 2023–24ம் ஆண்டிற்கு பொறியியல் பிரிவில் நடைபெறும் வளர்ச்சிப்பணிகள் மற்றும் இதர பணிகள் தொடர்பாக தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ய ஆகும் கட்டணத்திற்கு உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றதை அனுமதிக்கு<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.3566/2023/இ1** | **தீர்மானம் எண்.793 அனுமதிக்கப்பட்டது** |
| 2 | பொள்ளாச்சி நகராட்சி பராமரிப்பின் கீழ் இயங்கி வரும் மார்க்கெட் ரோடு நீருந்து நிலைய Old Scheme யில் Unit II யில் இயங்கி வந்த 100 HP Centrifugal Motor ஆனது Errection செய்யப்பட்டு சுமார் 14 ஆண்டுகள் ஆகிவிட்டதாலும், நாளொன்றுக்கு சுமார் 10 மணி நேரம் தொடர்ந்து இயக்கப்பட்டு வருவதால், Efficiency மிகவும் குறைந்து விட்டது. மேலும், தற்பொழுது Pump முற்றிலும் பழுதாகியும் மீண்டும் பழுதுநீக்கம் செய்து இயக்க முடியாத நிலையிலும் உள்ளது. எனவே, நகருக்கு சீரான குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளது. இதற்கு Unit– II க்கு புதிதாக 100 HP Horizantal Split Casing Centrifugal Motor / 4000 LPM X 70m திறன் கொண்ட Pump ஆனது புதிதாக வாங்கி மேற்படி நீருந்து நிலையத்தில் Errection செய்து நல்ல நிலையில் இயக்கி நகர் பகுதிகளுக்கு தடையில்லா குடிநீர் விநியோகம் செய்வதற்கு ரூ.15.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அங்கீகாரத்தை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்<br>**ந.க.எண்.6538/2023/இ1** | **தீர்மானம் எண்.794 அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>3</td>
<td>பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சி மார்க்கெட் ரோடு நீருந்து நிலையத்தில் Unit-II 4000 LPM x 70m திறன் கொண்ட Pump மற்றும் Motor விநியோகம் செய்து பொருத்தும் பணிக்கு ரூ.15.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு 07.12.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<br><br>
<table>
<tr><td>1.</td><td>M/S:Power plus Electrical, Pollachi</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.01% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>G.Illaiyaraja, Selam</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.90% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:Power plus Electrical, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
1. மேற்படி பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>
2. மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:Power plus Electrical, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
3. மேற்காண் பணி குடிநீர் அத்தியாவசிய பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்:6538/2023/இ1</td>
<td>தீர்மானம் எண்.795<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>4</td>
<td>பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சி மார்க்கெட் ரோடு நீருந்து நிலையத்தில் 4000 LPM x 70m திறன் கொண்ட Pump மற்றும் Motor Unit–I, II இயக்குவதற்கு தேவையான Starter மற்றும் Main panel விநியோகம் செய்து பொருத்தும் பணிக்கு ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டிற்கு 07.12.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.
<table>
<tr><td>1.</td><td>M/S:Power plus Electrical, Pollachi</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.14% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>G.Illaiyaraja, Selam</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.47% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:Power plus Electrical, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>தீர்மானம் எண்.796<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<u>அலுவலகக்குறிப்பு:</u>
<ol>
<li>மேற்படி பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.</li>
<li>மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.14% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:Power plus Electrical, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.</li>
<li>மேற்காண் பணி குடிநீர் அத்தியாவசிய பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
ந.க.எண்:6538/2023/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>5</td>
<td>
பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் வார்டு எண்.36 VIP கார்டன் பகுதிக்கு புதிதாக குடிநீர் விநியோக குழாய் 3” PVC பதித்தல் பணிக்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டிற்கு 12.12.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.
<table>
<tr><td>1.</td><td>G.Illaiyaraja, salem</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.04% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>M/S:Power plus Electrical, Pollachi</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.04% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் G.Illaiyaraja, salem அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u>
<ol>
<li>மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.713, நாள்.29.09.2023-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.</li>
<li>மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் G.Illaiyaraja, salem அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.</li>
<li>மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
ந.க.எண்:6432 /2023/இ1
</td>
<td>தீர்மானம் எண்.797<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>6</td>
<td>
பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் பரப்பும் கொசு மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணிகளுக்கான பணியாளர்களை (Domestic Breeding Checkers) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் பொருட்டு 26.10.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் Online முறையில் கீழ்க்காணும் மூன்று ஒப்பந்தங்கள் பெறப்பட்டன Off line-ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படவில்லை.
</td>
<td>தீர்மானம் எண்.798<br>ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

**பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம்:**

1. M/s.Fusion Man power Infra Services, Trichi.
2. M/s. Vannam Contract, Trichi
3. M/s.Southern Solid Wast Management, Kanyakumari.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறைகள் திறக்கப்பட்டு, கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் M/s.Fusion Man power Infra Services, Trichi மற்றும் M/s.Vannam Contract, Trichi ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் தகுதி வாய்ந்தவைகளாக உள்ளது என தெரியவருகிறது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித உறைகள் 31.10.2023 அன்று திறக்கப்பட்டது. விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு.

| வ. எண் | பெயர் | 86 பணியாளர்களுக்கு 6 மாத்த்திற்கு கோரிய தொகை |
|---|---|---|
| 1 | M/s.Fusion Man power Infra Services, Trichi | ரூ.6852356.<br>(மதிப்பீடு தொகைக்கு) |
| 2 | M/s. Vannam Contract, Trichi | ரூ.6952356.00<br>(மதிப்பீடு தொகையை விட 1.46 % அதிகம்) |

மேற்படி குறைவான விலைப்புள்ளி வழங்கிய திருவாளர்கள். Fusion Man power Infra Services, Trichi அவர்கள் செலவுத் தொகைக்கு சமமாக உள்ள காரணத்தால் விலைக்குறைப்பு கோரி கடிதம் அனுப்பப்பட்டதில், கோரப்பட்ட தொகையிலிருந்து ரூ.1000/- குறைவாக குறைத்து செய்து தர சம்மத கடிதம் வழங்கியுள்ளார்.

எனவே, திருவாளர்கள். Fusion Man power Infra Services, Trichi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர்கள். Fusion Man power Infra Services, Trichi அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை குறிப்பினை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்: **1839/2023/இ1**

---

7

பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட 17 பள்ளிக்கூடங்களில் சொந்த தளவாடங்களைக் கொண்டு முதன்மை சேகரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் பொருட்டு 26.10.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் Online முறையில் கீழ்க்காணும் மூன்று ஒப்பந்தங்கள் பெறப்பட்டன Off line-ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படவில்லை.

**பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம்:**

1. M/s.Fusion Man power Infra Services, Trichi.
2. M/s. Vannam Contract, Trichi
3. M/s.Southern Solid Wast Management, Kanyakumari.

**தீர்மானம் எண்.799**
**ஏற்கப்பட்டது**

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறைகள் திறக்கப்பட்டு, கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் M/s.Fusion Man power Infra Services, Trichi மற்றும் M/s.Vannam Contract, Trichi ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் தகுதி வாய்ந்தவைகளாக உள்ளது என தெரியவருகிறது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித உறைகள் 31.10.2023 அன்று திறக்கப்பட்டது. விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு.

| வ. எண் | பெயர் | 32 பணியாளர்களுக்கு 6 மாதத்திற்கு கோரிய தொகை |
|---|---|---|
| 1 | M/s.Fusion Man power Infra Services, Trichi | ரூ.5679576.00 (மதிப்பீடு தொகையை விட 0.0001 % குறைவு) |
| 2 | M/s. Vannam Contract, Trichi | ரூ.5779576.00 (மதிப்பீடு தொகையை விட 1.76 % அதிகம்) |

மேற்படி குறைவான விலைப்புள்ளி வழங்கிய திருவாளர்கள். Fusion Man power Infra Services, Trichi அவர்கள் செலவுத் தொகைக்கு சமமாக உள்ள காரணத்தால் விலைக்குறைப்பு கோரி கடிதம் அனுப்பப்பட்டதில், கோரப்பட்ட தொகையிலிருந்து ரூ.1000/- குறைவாக குறைத்து செய்து தர சம்மத கடிதம் வழங்கியுள்ளார்.

எனவே, திருவாளர்கள். Fusion Man power Infra Services, Trichi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர்கள். Fusion Man power Infra Services, Trichi அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை குறிப்பினை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்: **1839/2023/இ1**

8

பொள்ளாச்சி நகராட்சி கிழக்கு பகுதிகளில் உள்ள 19 வார்டுகளில் **(வார்டு எண்.5, 6, 7, 8, 9, 10, 11, 20, 21, 22, 23, 24, 25, 26, 31, 32, 34, 35 மற்றும் 36)** குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளையும், குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் மதகுகளில் (Valve) ஏற்படும் கசிவுகளையும், பொதுக் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும், குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் கிணற்று நீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும் உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியுள்ளது. மேலும் அவ்வப்பொழுது குடிநீர் குழாய் உடைப்பு சரி செய்தல் மற்றும் அடைப்புகள் ஆகியவற்றை சரிசெய்து, பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதாலும், குடிநீர் அத்தியாவசியப் பணியான இப்பணியை மேற்கொள்வதற்கு ரூ.9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் எண்.800 அனுமதிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அங்கீகாரத்தை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண். 9859/2023/இ1** | |
| 9 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33ல் ஊத்துக்காடு ரோடில் ஏற்கனவே உள்ள AC 300mm குடிநீர் குழாய் அதிக அளவு பழுதடைந்து உள்ளதால், அதனை சீர் செய்ய தார்சாலை அகழ்வு செய்யவேண்டியுள்ளது. தற்போது TURIF 2023-24ல் தார் சாலை அமைக்க உள்ளதால், பழைய 300mm AC Pipe க்கு பதிலாக 200mm PVC Pipe அமைத்து பகிர்மான குழாய் மூலம் அங்குள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு ரூ.4.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அங்கீகாரத்தை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண்.9617/2023/இ1** | **தீர்மானம் எண்.801**<br>**நகர்மன்ற தீர்மான எண்.790**<br>**நாள்.30.11.2023 ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது** |
| 10 | பொள்ளாச்சி நகராட்சியில் வார்டு எண்.36ல் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள VIP கார்டன் (வடக்கு) பகுதியில் மீதமுள்ள தெருக்களுக்கு, புதிய குடிநீர் பகிர்மான குழாய் (3" PVC) அமைப்பதன் மூலம் புதியதாக கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு, குடிநீர் இணைப்பு வழங்க இயலும். இதனால் நகராட்சிக்கு வருவாய் உயரும். மேற்கண்ட பணியை மேற்கொள்ள ரூ.3.25 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அங்கீகாரத்தை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண். 6432/2023/இ1** | **தீர்மானம் எண்.802**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td>11</td><td>பொள்ளாச்சி நகராட்சியில் தற்போது பழுதடைந்த குடிநீர் வால்வுகளுக்கு பதிலாக புதிய குடிநீர் குழாயில் வால்வு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட வால்வு சீராக இயக்குவதற்கும், அதனை பராமரிக்கவும் ஏதுவாக வால்வு தொட்டிகள் கட்டும் பணிக்கு ரூ.2.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.10346/2023/இ1</td><td>தீர்மானம் எண்.803<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>12</td><td>பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீரில் கிருமி நாசினியாக திரவ குளோரின் வாயு, ஹைபோ குளோரின் திரவம் மற்றும் பிளிச்சிங் பவுடர் ஒரு வருட கால அளவிற்கு விநியோகம் செய்தல் பணிக்கு ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 15.12.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<br>
<table>
<tr><td>1.</td><td>M/S:Sri Krishna Chemicals, Coimbatore.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 9.09% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>M/S:Sri Mahalakshmi Scientific Company, Coimbatore.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.63% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:Sri Krishna Chemicals, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.784, நாள்.30.11.2023–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>2. மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 9.09% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:Sri Krishna Chemicals, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 9946/2023/இ1</td><td>தீர்மானம் எண்.804<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>13</td>
<td>பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்தம் செய்வதற்கு தேவையான (Alum) கட்டி ஒரு வருட கால உபயோகத்திற்கு விநியோகம் செய்தல் பணிக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 15.12.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.
<table>
<tr><td>1.</td><td>G.Ilaiyaraja, Salem</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.01% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>M/S:Power plus Electrical, Pollachi</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 5.00% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் G.Illaiyaraja, Salem அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
1. மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.786, நாள்.30.11.2023–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>
2. மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் G.Illaiyaraja, Salem அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்:9947/2023/இ1</td>
<td>தீர்மானம் எண்.805<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>14</td>
<td>பொள்ளாச்சி நகராட்சியில் வார்டு 1 முதல் 36 வரையிலான வார்டுகளுக்கு தனியார் மூலம் வெளிக்கொணர்வு அடிப்படையில் 267 தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அரசாணை எண்.116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.08.2022 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறையில் பொள்ளாச்சி நகராட்சியில் 36 வார்டுகளிலும் தூய்மை பணிகள் மேற்கொள்வதற்கு 116 தூய்மை பணியாளர்கள், 7 துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் 21 ஓட்டுநர்கள் ஆகிய பணியாளர்களை கொண்டு தனியார் மூலம் வெளிக்கொணர்வு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் அப்போலோ மேன்பவர் சர்வீஸ் நிறுவனம் மூலம் 01.06.2023 முதல் தூய்மை பணிகள் மேற்கொள்ள உத்திரவிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.</td>
<td>தீர்மானம் எண்.806<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | நுண்ணுயிர் உரமாக்கும் மையம், OCC மையம், உயிரி எரிவாயு மையம், வள மீட்பு மையம், உரக்கிடங்கு மற்றும் நகராட்சிக்கு சொந்தமான வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட பூங்காக்களுக்கு தூய்மை பணிகள் மேற்கொள்வதற்கு தூய்மை பணியாளர்கள் நியமிக்கப்படாததால் பொது சுகாதார பணிகள் பாதிக்கப்படும் சூழல் உள்ளதால் இப்பணிகளை தனியார் மூலம் வெளிகொணர்வு அடிப்படையில் 54 பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.<br>நகர்மன்ற தீர்மானம் எண்.660 நாள்.31.07.2023-ல் மேற்காண் பொது சுகாதார பணிகளுக்கு 45 எண்ணிக்கையிலான தூய்மை பணியாளர்களை கொண்டு ஜீன் 2023–ல் Section 57-ன் கீழ் பணிகள் மேற்கொண்டதையும், ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதத்திற்கும், நகர்மன்ற தீர்மானம் எண்.707 நாள்.29.09.2023-ன்படி அக்டோபர் மாதத்திற்கும், நகர்மன்ற தீர்மானம் எண்.767 நாள்.31.10.2023–ன்படி நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்திற்கும் தனியார் மூலம் வெளிக்கொணர்வு அடிப்படையில் அப்போலோ மேன்பவர் சர்வீஸ் நிறுவனம் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளதால், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதிய விகிதத்தின் அடிப்படையில் பிரதி மாதத்திற்கான உத்தேச செலவினம் ரூ.8,00,000/- வீதம் தற்காலிகமாக ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் 2024 ஆகிய மூன்று மாதத்திற்கு மட்டும் அப்போலோ மேன்பவர் சர்வீஸ் நிறுவனம் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.**7417/2022/எச்1** | |
| 15 | பொள்ளாச்சி நகராட்சியில் வார்டு எண்.17ல் அழகாபுரி வீதி மற்றும் அழகப்பன் மில் ரோடு வீதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் பழுதடைந்துள்ளதால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயவில்லை. எனவே புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைத்துதர நகரமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். மேற்கண்ட பணியை மேற்கொள்ள ரூ.4.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்**. 10661/2023/இ1 | **தீர்மானம் எண்.807 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 16 | பொள்ளாச்சி நகராட்சியில் வார்டு எண்.07ல் VND நகர் பகுதியில் மீதமுள்ள தெருக்களுக்கு, புதிய குடிநீர் பகிர்மான குழாய் (3" PVC) அமைப்பதன் மூலம் புதியதாக கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு, குடிநீர் இணைப்பு வழங்க இயலும். இதனால் நகராட்சிக்கு வருவாய் உயரும். மேற்கண்ட பணியை மேற்கொள்ள ரூ.1.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்**.10664/2023/இ1 | **தீர்மானம் எண்.808 அனுமதிக்கப்பட்டது** |
| 17 | பொள்ளாச்சி நகராட்சியில் வார்டு எண்.25ல் ராஜாஜி வீதியில் கிணற்று நீர் பகிர்மான குழாய் பழுதடைந்துள்ளது. எனவே புதிய கிணற்று நீர் பகிர்மான குழாய் அமைத்துதர நகரமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். மேற்கண்ட பணியை மேற்கொள்ள ரூ.1.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.10660/2023/இ1** | **தீர்மானம் எண்.809 அனுமதிக்கப்பட்டது** |
| 18 | பொள்ளாச்சி நகராட்சி பராமரிப்பின் கீழ் இயங்கி வரும் அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலைய 100HP Centrifugal Pump மற்றும் மார்க்கெட் ரோடு நீருந்து நிலையத்தில் இயங்கி வரும் 250HP Induction Motor and Pump ஆனது பழுதடைந்துள்ளது. தற்போது அதற்கு Alternate Pump மற்றும் Motor ஆனது அதிக நேரம் இயக்கப்பட்டு வருகிறது. இதனால் அதிகநேரம் மாற்று மோட்டார் மற்றும் Pumpஐ இயக்கி நகருக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருவதனால் நகருக்கு சீரான குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளது. மேற்காண் 100HP Centrifugal Pump (தலைமை நீரேற்று நிலையம்) மற்றும் 250HP Induction Motor and Pump (மார்க்கெட் ரோடு நீருந்து நிலையம்) ஆகியவற்றை பழுது நீக்கி நல்ல முறையில் இயக்குவதன் மூலம் நகருக்கு சீரான குடிநீர் வழங்க இயலும். இப்பணியை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1.40 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணியை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 10751/2023/இ1** | **தீர்மானம் எண்.810 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 19 | பொள்ளாச்சி நகராட்சியில் வார்டு எண்.36ல் காமராஜர் நகரில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் பழுதடைந்துள்ளதால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயவில்லை. எனவே, புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைத்துதர நகரமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். மேற்கண்ட பணியை மேற்கொள்ள ரூ.1.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.10663/2023/இ1** | **தீர்மானம் எண்.811 அனுமதிக்கப்பட்டது** |
| 20 | பொள்ளாச்சி நகராட்சியில் வார்டு எண்.31ல் தன்னாட்சியப்பன் கோவில் வீதியில் உள்ள புதிய கிணற்றுநீர் பகிர்மான குழாய் அமைத்துதர நகரமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். மேற்கண்ட பணியை மேற்கொள்ள ரூ.2.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.10662/2023/இ1** | **தீர்மானம் எண்.812 அனுமதிக்கப்பட்டது** |
| 21 | பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளுக்கு அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 220 HP, 100HP மற்றும் 75 HP மின் மோட்டார் மற்றும் பம்பு மூலமாக நீர்உந்து நிலையத்திற்கு நீரேற்றம் செய்யப்பட்டு குடிநீர் நகர் முழுவதும் வழங்கப்படுகிறது. தற்போது 75 HP Motor Unit-I ஆனது பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. இதனால் 75 HP Unit-II அதிக நேரம் இயக்கப்படுகிறது. இதனால், நகருக்கு சீரான குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே பழுது சரிசெய்து நல்ல முறையில் இயக்குவதற்கு ரூ.1.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>**<u>ந.க.எண்</u>**.10752/2023/இ1 | **தீர்மானம் எண்.813 அனுமதிக்கப்பட்டது** |
| 22 | இந்நகராட்சிக்கு 2024–2025 ஆம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், டோக்கன்கள், கணினி இரசீதுகள் மற்றும் டோனர்கள் ஆகியவைகளை கூட்டுறவு அச்சகங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.60,00,000/–க்கு (அறுபது இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண்.814 அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td><u>அலுவலகக் குறிப்பு :</u><br>1.மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 010218/2023/டி1</td><td></td></tr>
<tr><td>23</td><td>பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட ஜோதிநகர் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு மார்க்கெட் ரோடு நீர்உந்து நிலையத்திலிருந்து ஊத்துக்காடு ரயில்வே கேட் தண்டவாளத்தின் கீழ் பகுதியின் வழியாக 5" PVC பிரதான குழாய் மூலம் நீரேற்றம் செய்யப்படுகிறது. இதன் மூலம் அதனை சுற்றி உள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. ரயில்வே தண்டவாளத்தின் கீழ் பகுதியில் அதிர்வின் காரணமாக 5" PVC அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. இதனால் குழாய் பழுதினை மேற்கொள்ள ரயில்வே அலுவலகத்தின் அனுமதி கிடைப்பதில்லை. எனவே ரயில்வே தண்டவாளத்தின் கீழ் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 300mm DI Pipe யுடன் இணைப்பு ஏற்படுவதுடன் மூலம் Pipe உடைப்பு ஏற்படாமல் சீரான குடிநீர் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீரேற்றம் செய்ய இயலும். இப்பணியை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.2.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.10645/2023/இ1</td><td>தீர்மானம் எண்.815<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>24</td><td>பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நோட்டீஸ் அச்சடிப்பதற்கு 11.12.2023–ல் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காண் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th></tr>
<tr><td>1</td><td>சிவசக்தி ஸ்கிரின்ஸ் & பிரிண்டர்ஸ்</td><td>. 12,400/-</td></tr>
<tr><td>2</td><td>ஆஸ்கார் டிரேடர்ஸ்</td><td>. 15,150 /-</td></tr>
<tr><td>3</td><td>அண்ணா கலையகம்</td><td>. 14,100/-</td></tr>
</table>
மேற்காண் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள சிவசக்தி ஸ்கிரின்ஸ் & பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.<br><u>அலுவலகக் குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : எச்2/4477/2023</td><td>தீர்மானம் எண்.816<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>25</td>
<td>பொள்ளாச்சி நகராட்சியில் NUHM-SHS-TN 2023-24 திட்டத்தின் கீழ் நகராட்சி வார்டு எண்.01 வடுகபாளையத்தில் புதிய நகர்ப்புற துணை சுகாதார நிலையம் கட்டுதல் பணிக்கு ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 07.11.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<br>
<table>
<tr><td>1.</td><td>திரு.எஸ்.பார்த்திபராஜன்,<br>பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.005% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>திரு.R.சுப்ரமணியம்,<br>பொள்ளாச்சி</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1. மேற்படி பணிக்கு நிகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண்.2692/2023/பி1, நாள்.29.09.2023ல் பெறப்பட்டுள்ளது.<br>
2. மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.005% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
3. இப்பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண்: 7472/2023/இ1</td>
<td>தீர்மானம் எண்.817<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>26</td>
<td>பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் வார்டு எண்.16, பாலகிருஷ்ணா லே அவுட் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ரூ.1.40 இலட்சம் மதிப்பீட்டிற்கு 17.11.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<br>
<table>
<tr><td>1.</td><td>திரு.U.அரீஃப்கான்,<br>பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.02% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>M/s.திருமலை அன் கோ,<br>பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.23% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.U.அரீஃப்கான், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>தீர்மானம் எண்.818<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.673, நாள்.31.07.2023–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>2. மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.02% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.U.அரீஃப்கான், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: **6041/2023/இ1** | |
| 27 | பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளில் பல்வேறு திட்டப்பணிகளான சாலைப்பணிகள், குடிநீர் பணிகள், பாதாள சாக்கடை பணிகளில் வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு அடிப்படை வசதிப் பணிகள் நடைபெற்று வருவதால், மேற்கண்ட பணிகளின் அவசர அவசியம் கருதியும், இந்நகராட்சியில் போதிய தொழில் நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், Outsourcing முறையில் தொழில்நுட்ப உதவியாளர் கிரேடு–I–ல் 1 நபர், தொழில்நுட்ப உதவியாளர் கிரேடு–II–ல் 1 நபர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் கிரேடு–III–ல் 1 நபர் ஆகிய 3 தொழில்நுட்ப உதவியாளர்களை பணிக்கு அமர்த்த வேண்டியுள்ளது. தற்பொழுது வரை மேற்படி பணியை மேற்கொள்ளும் நிறுவனமான காளியம்மன் மகளிர் சுய உதவிக்குழு, பொள்ளாச்சி அவர்களின் 08.02.2023–ம் தேதிய விலைப்புள்ளி பட்டியலில் விலைவிகிதமான 3 நபர்களுக்கு தற்காலிகமாக (டிசம்பர்(2023), ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் (2024)) ஆகிய 4 மாதங்களுக்கு பணியினை மேற்கொள்ளவும், மேற்கண்ட பணியாளர்களுக்கான ஊதியத்தினை Schedule of rates 2022–23–க்கான விலைப்பட்டியலில் உள்ளவாறு EPF, ESI மற்றும் Insurance உடன் மதிப்பீட்டு தொகை ரூ.5.30 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவு தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி பெறலாம். மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை 4 மாதங்களுக்கு சுய உதவிக் குழுவின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: **2072/2022/இ1** | **தீர்மானம் எண்.819 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 28 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் கடித எண். 4204/2023/பி1 நாள்:25.10.2023–ன் படி, திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக பயன்பாட்டிற்கு கணினி – 4 எண்ணம், அச்சுப்பொறி – 2 எண்ணம் ஆகியவற்றை, பொள்ளாச்சி நகராட்சி நிதியிலிருந்து கொள்முதல் செய்து பொருத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.7.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்: **9649/2023/இ1** | **தீர்மானம் எண்.820 அனுமதிக்கப்பட்டது** |
| 29 | பொள்ளாச்சி நகராட்சி பாலகோபாலபுரம் வரிவசூல் மையம், ஆணையாளர் அறை கருத்தரங்க கூட்டம் ஆகிய இடங்களில் உள்ள UPS Battery கள் பழுதடைந்துவிட்டது. இதனால், வரி வசூல் மற்றும் அலுவலக பணிகள் சரிவர மேற்கொள்ள இயலவில்லை. எனவே, மேற்படி இடங்களுக்கு புதிதாக Battery வாங்கி பொருத்துவதற்கு ரூ.4.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **2452/2023/இ2** | **தீர்மானம் எண்.821 அனுமதிக்கப்பட்டது** |
| 30 | பொள்ளாச்சி நகராட்சி அலுவலக கணினி பிரிவு மற்றும் பொது பிரிவு ஆகிய இடங்களில் உள்ள UPS Battery கள் பழுதடைந்துவிட்டது. இதனால், வரி வசூல் மற்றும் அலுவலக பணிகள் சரிவர மேற்கொள்ள இயலவில்லை. எனவே, மேற்படி இடங்களுக்கு புதிதாக Battery வாங்கி பொருத்துவதற்கு ரூ.6.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **7820/2023/இ1** | **தீர்மானம் எண்.822 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 31 | பொள்ளாச்சி நகராட்சியில் மின் ஆளுமைப் பணிகள் திறம்பட நடைமுறைப்படுத்த ஏதுவாக பயன்பாட்டில் உள்ள கணினி, LCD Projector மற்றும் சார்பு உபகரணங்களுக்கான ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) ஜனவரி 2024ல் முடிவடைவதால், தடையில்லா பராமரிப்பை தொடரும் பொருட்டு, மேலும் ஓராண்டிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.5.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: 5432/2021/இ1 | **தீர்மானம் எண்.823 அனுமதிக்கப்பட்டது** |
| 32 | பொள்ளாச்சி நகராட்சியில் மின் ஆளுமைப் பணிகள் திறம்பட நடைமுறைப்படுத்த ஏதுவாக பயன்பாட்டில் உள்ள Printer கள் மற்றும் Scanner களுக்கான ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) ஜனவரி 2024ல் முடிவடைவதால், தடையில்லா பராமரிப்பை தொடரும் பொருட்டு, மேலும் ஓராண்டிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.5.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: 5433/2021/இ1 | **தீர்மானம் எண்.824 அனுமதிக்கப்பட்டது** |
| 33 | பொள்ளாச்சி நகராட்சியில் மின் ஆளுமைப் பணிகள் திறம்பட நடைமுறைப்படுத்த ஏதுவாக பயன்பாட்டில் உள்ள கணினியுடன் இணைக்கப்பட்டுள்ள UPS, Battery and Networking Equipments களுக்கான ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) ஜனவரி 2024ல் முடிவடைவதால், தடையில்லா பராமரிப்பை தொடரும் பொருட்டு, மேலும் ஓராண்டிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள, ரூ.5.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: 5434/2021/இ1 | **தீர்மானம் எண்.825 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 34 | பொள்ளாச்சி நகராட்சி அலுவலக வளாகத்தில் CCTV கேமராக்கள் 35 எண்ணிகைகளில் பொருத்தப்பட்டு இயங்கி வருகிறது. இக்கேமராக்களை தங்குதடையின்றி இயக்க ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே, இவ்வலுவலக பயன்பாட்டில் உள்ள CCTV கேமரா மற்றும் சார்பு உபகரணங்களை ஆண்டு பராமரிப்பு செய்வதற்கு ரூ.3.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **3734/2022/இ1** | **தீர்மானம் எண்.826 அனுமதிக்கப்பட்டது** |
| 35 | பொள்ளாச்சி நகராட்சி அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் உள்ளாட்சி நிதி தணிக்கை உடனிகழ் தணிக்கை பிரிவிற்கு காணொலி கூட்டம் நடத்துவதற்கு ஏதுவாக கேமரா, மைக் மற்றும் ஸ்பீக்கர் பொருத்தி தருமாறு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள ரூ.69000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **9649/2023/இ1** | **தீர்மானம் எண்.827 அனுமதிக்கப்பட்டது** |
| 36 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.03ல் பாலக்காடு சாலையில் உள்ள RP Motors அருகில் கிழபுறம் தென்வடலாக உள்ள சேதமடைந்த கான்கிரீட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் உள்ள பகுதியில் புதிதாக கான்கிரீட் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் பக்கசுவர் உயர்த்துதல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்புதல் வழங்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அங்கீகாரத்தை எதிர்நோக்கி | **தீர்மானம் எண்.828 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று எடுக்கப்பட்ட மேல்நடவடிக்கைகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண்: 9268/2023/இ1** | |
| 37 | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.19 ஜீப்ளி கிணறு வீதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பொது கிணறு சுற்றியுள்ள சுற்றுசுவர் தற்போது பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது. எனவே பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு கருதி மேற்கண்ட இடத்தில் உள்ள பழைய சுற்றுசுவர் அப்புறப்படுத்தியும், அடித்தளம் மேல் சுற்றுசுவர் அமைக்கவும், பழுதடைந்த இரும்பு கதவுகளை மராமத்து செய்யவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 6059/2023/இ1** | **தீர்மானம் எண்.829 அனுமதிக்கப்பட்டது** |
| 38 | நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளில் அதிவேகமாக செல்லும் வாகனங்களால் விபத்துகள் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு சாலை பாதுகாப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டபடி, நகராட்சி மூலமாக அமைக்கப்பட்டு உள்ள வேகத்தடைகளை வாகன ஓட்டுனர்கள் தெரிந்துகொள்ளுவதற்கு ஏதுவாக ஒளிரும் வெள்ளை பெயிண்ட் (தர்மோ பிளாஸ்டிக்) Road Marking செய்ய வேண்டியுள்ளது.<br>பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் நலன் கருதி பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 10645/2023/இ1** | **தீர்மானம் எண்.830 அனுமதிக்கப்பட்டது** |
| 39 | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 31 உடுமலை ரோடு மயானத்தில் உள்ள கழிப்பறை பல வருடங்களுக்கு முன்னர் நகராட்சி மூலம் கட்டப்பட்டதாகும். இக்கழிப்பிடம் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆவதால், கட்டிடத்தில் பழுதுகள் ஏற்பட்டு, பெயர்ந்தும், "வாட்டர் குளோசட்கள்" உடைந்த நிலையிலும் காணப்படுகிறது. இதனால் | **தீர்மானம் எண்.831 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | கழிப்பிடத்தை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் கழிப்பிடத்தை பயன்படுத்தும் பொது மக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள்.<br>பொதுமக்கள் நலன் கருதி, கழிப்பிடத்தில் மராமத்துப்பணி மேற்கொண்டு புதுப்பிக்க ரூ.4.50 இலட்சத்திற்கு மதிப்பிடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: 6505/2023/இ1 | |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா**
**நகர்மன்ற தலைவர்**
**பொள்ளாச்சி நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**பொள்ளாச்சி நகராட்சி**